# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 10 செவ்வாய்க்கிழமை (23-05-2000) VALAMPURI ஒலி 155


★ யாழ். யுத்த நிலைவரம் ★ யுத்த நிறுத்தம் குறித்து !

# நோர்வே வெளியுறவுபிரதி அமைச்சர்

# ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு !

## எதிர்க் கட்சித் தலைவரையும் சந்தித்தார்

(கொழும்பு)

இராணுவத்தினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை நடந்துகொண்டிருக்கும் இவ் வேளையில் நோர்வே வெளி விவகாரப்பிரதி அமைச்சர் ரேமன்ட் ஜொகான்சன் தலைமையிலான குழுவினர் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சிகள் குறித்து ஆராய்வதற்கு நேற்று அதிகாலை கொழும்பு வந்துள்ளனர்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக இந்த உயர்மட்ட தூதுக்குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்து யுத்த நிறுத்தம் தொடர்பாகபேசிய தாக தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாகத் தீர்க்கப் படாமல் உள்ள இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசுக்கும்' விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக நேற்று அதிகாலை 3.50 மணிக்கு நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரேமன்ட் ஜொகான்சன் தலைமையில் கொழும்பு வந்த தூதுக்குழுவினர் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை நேற்று நண்பகல் 12·00 மணியளவில் சந்தித்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ், பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப் பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 9.00 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5மணிக்குஊரடங்கு தளர்த் தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக் கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [க-வ]

## 'சன்டேலீடர்' பத்திரிகைக்கு தடைவிதிக்கப்பட்டது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வெளி வரும் ஆங்கிலப் பத்திரிகை யான 'லீடர்' பத்திரிகைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. தகுதிவாய்ந்த அதிகாரி இதற்கான உத்தரவை நேற்றுப் பிறப்பித்துள்ளார்.

அவசரகால பிரமாணங்களின் கீழ்விதிக்கப்பட்டநெறி முறைகளை மீறியமையா

( 4ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாத புலனாய்வு பணிப்பாளரை தொல்லை தவிர்ப்புக் குழு முன் ஆஜராகுமாறு அவசர பணிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளரை தொல்லை தவிர்ப்புக்குழுவின் முன் ஆஜராகுமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட தமிழ்க் கைதிகள் தகுந்த காரணமில்லாமல் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக விளக்கமளிப்பதற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ★ போதியளவு உணவு இருந்தும் லொறி வசதிகள் இன்மையால் பட்டினியை எதிர்நோக்கும் யாழ். மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் போதியளவு அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, சீனி, மா போன்றவை கையிருப்பில் இருந்த போதும் அவை மக்கள் கைகளில் கிடைப்பதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளன.

யாழ். செயலக புனர் வாழ்வுப் பகுதியினரின் குருநகர்

(4ஆ பக்கம் பார்க்க]

## தமிழகம்செல்லும்அகதிகள் தொகை அதிகரிப்பு

(சென்னை)

யாழ்ப்பாணத்தின் யுத்த நிலை காரணமாக தமிழகம் செல்லும் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை கடந்த பத்து நாட்களின்பின் மீண்டும் அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம்தமிழகம் சென்ற 9 அகதிகள் தலைமன்னாருக்கும்தனுஸ்கோடிக் கும் இடையேயுள்ள 4வது

[4ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். நிலைமை புதுடில்லியில் பேச்சு

[புதுடில்லி]

யாழ்ப்பாணத்தில் தற்போது தோன்றிவரும் வேகமான மாற்றங்கள் குறித்து இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிர்ஜிஸ் மிஸ்ரா இந்திய முப்படை அதிகாரிகளுடன் நேற்றுமுன்னதினம் பேச்சுவார்த்தை நடாத்தியுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் நிரந்தர அமைதிக்கு இந்தியா, அமெரிக்கா, நோர்வே கூட்டாக உதவ வேண்டும்

### லக்ஷ்மன் கதிர்காமர்

(கொழும்பு)

இலங்கையில் தொடரும் யுத்தத்தை நிறுத்தி அமைதி நிலையை ஏற்படுத்தும் முயற்சியை இந்தியா, அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகள் கூட்டாக மேற்கொள்ளலாம் என இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்,

இதே வேளை. இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் விரும்பினால் தாம் மத்தியஸ்தம் வகிக்கும் முயற்சியில் ஈடுபட முடியுமென நோர்வே நாட்டுப் பிரதி வெளியுறவு அமைச்சர்ரேமன்ட்ஜொகான்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ★ இலங்கை விவகாரம் தொடர்பாக பிரதமர் வாஜ்பாயின் உரைக்கு பி. ஜே. பி. பச்சைக்கொடி

[புதுடில்லி]

இலங்கையின் நிலைமை வேகமாக மாறி வருவதால் இந்தியா எந்த நடவடிக்கையும் எடுக்க தயாராயிருப்பதாக இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளதனை பாரதிய ஜனதாக் கட்சி அங்கீகரிப்பதாக கட்சித் தலைவர் குஷாரத் தாக்கரே தெரிவித்துள்ளார்..

சென்னையில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் மீது இந்திய அரசாங்கம் விதித்த தடை சரியானது என அவர் மேலும் தெரிவித்தார்.

## தனங்களப்பில் விமானத் தாக்கு

(கொழும்பு)

தனங்களப்புப் பகுதியில் விமானத் தாக்குதலும் பீரங்கித்தாக்குதலும் நடாத்தப் பட்டதாக விசேட தகவல் தொடர்பு ஊடகம் நேற்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## லொறிகள் திரும்பின

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறைமுகத்திற்கு மா ஏற்றி வரச் சென்ற பல நோக்கு கூட்டுறவு சங்க லொறிகள் மா ஏற்றாமலேயே நேற்று திரும்பி வந்தன. [ச-வ]

## ★ அடுத்த மாதம் 4ஆம்திகதிவரை பொதுக்கூட்டங்கள் ஊர்வலங்களுக்குத்தடை

பொதுக் கூட்டங்கள், மற்றும் ஊர்வலங்கள் மீதான தடை அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

அவசர காலப் பிரமாணங்களின் அடிப்படையின் கீழ் தமக்கு வழங்கப்பட்ட விசேட (4ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு விளம்பரம்

**வியாழ-சனிமாற்றம்**
சிவராசா வெளியிட்டவிண்ணில் வியாழ மாற்றம் மண்ணில் உங்கள் யோக பலன் சனி மாற்றம் உங்களுக்கு எப்படி (கனவுகளுக்கு பலாபலன் களும் உள்ளன)என்று கேட்டு வாங்குங்கள்.

431

**ஒப்படைக்கவும்**

மானிப்பாய்றோட் வேல் முருகன் மில் உரிமையாளர் நயினாதீவு அமுதசுரபிக்கு உரிய மிளகாய்த்தூளை சிவம் வெற்றிலைக்கடையில் இன்று ஒப்படைக்கவும். சிவம் வெற்றிலைக்கடை, மார்க்கட்.

435)


# திரிபுராவில் தொடரும் வெறியாட்டம்

# பலியானோர்தொகை45ஆக உயர்வு

## பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சு

[புதுடில்லி]

கடந்த மூன்று தினங்களாக மேற்குதிரிபுராவில்தொடரும் தீவிரவாதிகளின் வெறியாட்டத்தில் பலியானோரின்எண்ணிக்கை 45 ஆக அதிகரித்துள்ளது.70 இற்கும் அதிகமான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக பி.ரி.ஐ. செய்தி நேற்று தெரிவித்துள்ளது.

பாக்தார், ராஸியா ஆகிய கிராமங்களில் மட்டும் தடை செய்யப்பட்ட தேசிய முன்னணியைச் சேர்ந்த தீவிரவாதிகளால் 32 பேர்வரை கொல்லப்பட்டதாகவும் பி.ரி.ஐ. மேலும் தெரிவித்துள்ளது.

வன் முறைகள் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் பதட்டநிலை தொடர்ந்து நீடித்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் திரிபுரா முதலமைச்சர் மனிக்சர்தார் புதுடில்லியில் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயுடன் திரிபுரா நிலைமை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் கூடுதல் இராணுவத்தினரை அனுப்புமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் புதுடில்லிச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (க)

## வவுனியாவில் சிப்பாய்உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா மாமடுப் பகுதியில் ''கைக்குண்டு'' ஒன்று வெடித்ததில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. சிப்பாயின் கையிலிருந்த கைக்குண்டே தவறுதலாக வீழ்ந்து வெடித்ததில் அவர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (04)

## ஹெலிகொப்ரர் சுட்டு வீழ்த்தப்பட்டது
## செச்செனிய போராளிகள் தாக்குதல்

(மொஸ்கோ)

ரஷ்ய இராணுவ ஹெலிகொப்ரர் ஒன்று செச்செனிய போராளிகளால் நேற்றுமுன் தினம் சுட்டுவீழ்த்தப்பட்டது.

25 இற்கும்மேற்பட்ட இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற வேளையிலேயே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது.

இதில் பயணம் செய்த இராணுவத்தினர் அனைவருமே கொல்லப்பட்டதாக மொஸ்கோ வானொலிநேற்று தெரிவித்தது.

இச்சம்பவத்தை அடுத்து ரஷ்ய - செச்செனிய பனிப்போர் மேலும் தீவிரமடையலாம்என்றும்ரஷ்ய வானொலி மேலும் தெரிவித்துள்ளது.

# யாழ்கல்விக்கல்லூரியில் வகுப்பு நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா, மட்டக்களப்புக் கல்விக் கல்லூரிகளுக்கு தெரிவாகி போக்குவரத்து வசதியின்மையால் அங்கு செல்ல முடியாமல் இருக்கும் மாணவர்களுக்கு யாழ். தேசிய கல்விக்கல்லூரியில் நேற்று முதல் வகுப்புகள் நடைபெறுகின்றன.

வவுனியா, மட்டக்களப்பு கல்விக்கல்லூரிகளுக்கு தெரிவாகிய மாணவர்கள் யாழ். கல்விக்கல்லூரியில் தமது கல்வியைத் தொடர முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை போக்குவரத்து வசதிகளற்ற நிலையில் தமக்கு யாழ். கல்விக் கல்லூரியில் கற்பதற்கு வசதி செய்து தந்த யாழ். தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதி கமலநாதனுக்கு மாணவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (வ-ச)

## இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது

சிம்பாவேயுடன் நடைபெற்ற முதலாவது ரெஸ்ட் கிரிக்கெட் போட்டியில்இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் 5வருடங்களுக்கு பிறகு இங்கிலாந்து பெறும் வெற்றியாகும் இங்கிலாந்து அணி ஒரு இனிங்ஸினாலும் 209 ஓட்டங்களினாலும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (22)


## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

மேற்படி சங்கம் 'லக்சுமி வாசா' குளப்பிட்டி றோட்,கொக்குவில் மேற்கு,கொக்குவில் எனும் முகவரியில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகத்தினர்

317,பிரதான வீதி
யாழ்ப்பாணம்

[சி/434]

## எமது வாடிக்கையாளர் கவனத்திற்கு

## சிவா நறுமணப் பூங்கா

288. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி முகவரியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் அநேக வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு அமைய தற்காலிகமாக

**பொன்னையா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை.**

என்ற முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை அறியத்தருவதோடு, எம்மிடம்

★ பிஸ்கட் ★ டொபி
★ பேக்கறி உற்பத்திக்கு தேவையான பொருள்கள்
★ ஐஸ்கிறீம் தயாரிப்புப் பொருள்கள்
★ பொலித்தீன் வகைகள்

இன்னும் பலவற்றையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறியத் தருகிறோம்.

குறிப்பு; ஆறுகால்மடத்திற்கு அடுத்த பஸ்தரிப்பு நிலைய தபால்கந்தோருக்கு அருகாமையில்.

(442)


## அமரத்துவ அஞ்சலி

### அரியகுட்டி சித்திரவடிவேலு

எமது உறவினர் சாவகச்சேரி குகன் ஸ்ருடியோ உரிமையாளர் திரு அரியகுட்டி சித்திரவடிவேலு அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் துயரமும் அடைகின்றோம். அவரின் குடும்பத்தார் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக.

திரு. ந. புவனேந்திரன்
திரு.நா.சிவனேசன்
திரு.செ.தியாகராசா
திரு.சி.சுரேந்திரராசா
திரு.க.விநயாகமூர்த்தி

இல:-428

## யாழ். பல்கலைக் கழகம் யாழ்ப்பாணம்

### மூதவைக் கூட்டம்

யாழ். பல்கலைக்கழக மூதவைக் (செனற்)கூட்டம் (விஷேடம்) 23-5-2000 காலை 10.00 மணிக்கு (இன்று) பல்கலைக் கழக சபா மண்டபத்தில் கூடவுள்ளது. அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொ.பாலசுந்தரம் பிள்ளை.
உபவேந்தர்.

(கி/331)


## D. M. I.

## மாணவர் கவனத்திற்கு

*A/L 2000 & DAY CLASS*

நாளை (24-05-00 புதன்) பின்வரும் இடங்களில் ஆரம்பமாகும்

SUBRA - சித்தன் கேணி காலை9மணி(ப.நே)

C. B. I. இணுவில் K. K. S. றோட்
காலை 8.30 (ப. நே)

ஏனைய வகுப்புக்கள்(27-05-00சனி)வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்

மாணவர்கள் வசதிக்கேற்ப கல்வி நிறுவனங்களைத் தெரிவு செய்ய முடியும்.

நிர்வாகி

[இல;430]

## பொருளியற் கல்லூரி

(கிளை நிறுவனம்)

கே. கே. எஸ். றோட், இணுவில்

A/L Day, 2000, 2001, 2002 வழமையான நேர அட்டவணைப்படி சகல வகுப்புகளும் நடைபெறுகின்றன.

நிர்வாகி.

(433)


## ஆசிறேடிங் கம்பனி உரிமையாளர்.
### யாழ். ஸ்ரான்லி வீதி

அவர்களை தொ. இல. 2442 ஊடாக திரு. இரத்தினராசா (நாவற்குழி) அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றார்.

தகவல்:
ஆர். நடராசா
நல்லைக்குமரன்.

(429)

## தொடர்பு கொள்ளவும்

நுணாவில் சந்தி சாவகச்சேரியைச் சேர்ந்த திரு.கந்தையா பரம்சோதியை எமது கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

திரு.ஜீவரட்ணம்
(ப.பாஸ்கரன்)
சங்கானை

இல:432

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை.

- குறள்

# வலம்புரி

## வேகிற வீட்டில்.

இடப்பெயர்வு இன்னல் ஒருபுறம். உயிரைப்பிடித்துக்கொண்டு ஊரெலாம்அலையும் மக்களுக்கு அச்சுறுத்தலாகஅமைவது திருடர் தொல்லை. பூட்டிய வீடுகளை உடைத்து உடமைகளைத் திருடி அற்ப சொற்ப விலைகளுக்கு விற்கிறார்கள். ஐந்து வருடங்களுக்குமுன்னும் இத்தகைய திருட்டு விழா விமரிசையாக நடந்தேறியது.

கஷ்டப்பட்டு தேடிய பொருட்களைச் சூறையாடும் வேடர்கள் சமுதாயத்தில் இருந்து பிடுங்கி எறியப்பட வேண்டும். காலம் கனிந்திருக்கிறது. கட்டுக்கோப்பான நிர்வாக நெறி மலரத்தான் போகிறது. அந்த வேளையில் வழக்குரைத்த கண்ணகி போல் கண்ணீரும் கம்பலையுமாக உரியவர்க்கு வழக்குரைக்கும் போது இந்தக்களைகள் பிடுங்கி எறியப்படுவார்கள்.

பொது நலனுக்காய் தேக்கி வைக்கப்பட்ட சீனி மூடைகள் 200 ரூபாவிற்கும், அரிசி மூடைகள் 300 ரூபாவிற்கும், லாம்புகள் 40 ரூபாவிற்கும், ரோச் லைட்டுக்கள் 10 ரூபாவிற்கும் கலிகாலக் கயவர்கள் விற்ற சங்கதி அண்மையில் துலாம்பரமானது. இந்தப் புல்லுருவிகள் முதல் தமிழ்மக்களின் பரமவிரோதிகளாவர். கரும்புள்ளி செம்புள்ளி குற்றி நான்கள்ளன்என்ற அட்டையுடன் சந்தியில் நிறுத்தப்பட வேண்டியவர்கள். இவை நடந்தன அன்று. இனியும் நடக்கும் நாளை என்பதை மறந்துவிடக்கூடாது. நிம்மதியாக இவர்கள் இந்த மண்ணில் வாழமாட்டார்கள்.

மாற்றான் இந் நிகழ்வுகளுக்கு ஏனோ தானோ என்று கண் மூடி மௌனியாகி விடுகின்றான். தமிழ் மண்ணின் மக்கள் உண்ட கோப்பையையும் ஆக்கிய சட்டியையும் இழந்த இழிநிலை. இவற்றிற்கு ஏதுவாக இருக்கும் வேடர்கள் விந்தனைக்காட்டிலிருந்து ஊடுருவியது எப்போ.

அழக்கொண்டஎல்லாம் அழப்போம் என்பதை இவர்கள் மறந்தும் மறுக்கக்கூடாது. பண்பு வளர, உண்மை துலங்க ஒரு கூட்டம் விலங்குகளை மனிதர்களாக்க வேண்டிய பணி எமக்கு அவசியம் உண்டு. திருடர்களே ஜாக்கிரதை. உங்கள் கழுத்துக்குமேல்கயிறு தொங்குவதை ஊகித்துக் கொள்ளுங்கள். பிடுங்கினது அறுதி என்று எண்ணாதீர்கள்.

- அன்புடன் ஆசிரியர்

## ஆசிரிய விரிவுரைகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்-கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரைகள் நேற்று திங்கள்(22-05-2000) முதல் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது

இதன்பிரகாரம் சகல விரிவுரையாளர்களும், ஆசிரியபயிலுநர்களும் கலாசாலைக்குச் சமுகமளிக்குமாறு கலாசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது

## திருட்டுகள் அதிகரிப்பு

[திருநெல்வேலி]

அண்மை நாட்களாக திருநெல்வேலிப்பகுதியில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளது.

இந்தப்பகுதியில் அடுத்தடுத்து இரண்டு சைக்கிள்கள் களவாடப்பட்டன எனவும் கள்வர்கள் அங்கு வாழும்மக்களால் இனம் காணப்பட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாகவும் விசாரணையின் பின்பு சைக்கிள்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [22]

★ இனப்பிரச்சினைத்தீர்வில்

# அரசும்புலிகளும் அழைப்புவிடுத்தால் மத்தியஸ்தம் வகிக்கத் தயார்

## ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிக்கதான் தயாராகவுள்ளதாக திபெத்தின் ஆன்மீகத்தலைவர் தலாய்லாமா தெரிவித்துள்ளார்

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சு வார்த்தை ஒன்றின் போது இக்கருத்தைகூறியுள்ளார் விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் இதற்கான அழைப்பை விடுத்தால் சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வொன்றினைக் காண்பதில் மத்தியஸ்தம் வகிக்கத்தான் தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையைதான்மிகவும் நேசிப்பதாகவும் அங்கு நிலவும் நிலைமை பற்றி தான் கேள்வியுற்றுக் கவலையடைந்துள்ளதாகவும் தலாய்லாமா மேலும் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-4)

## இலங்கை ஒற்றுமை இறையாண்மை சீர்குலைக்கும் நடவடிக்கை இல்லை

### அமைச்சர் ரங்கராஜன்குமாரமங்கலம்

இலங்கையில் தமிழ்மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் அதே சமயம் இலங்கையின் ஒற்றுமையையும் இறையாண்மையையும் சீர்குலைக்கும் வகைகளில் நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது என்றும் மத்திய மின்வளத்துறை அமைச்சர் ரங்கராஜன்குமார மங்கலம் கூறியுள்ளார்

திருச்சிராப்பள்ளியில் செய்தியாளர் மத்தியில் அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் பேசும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் மேலும்அங்கு பேசுகையில் தேசிய ஜனநாயகக்கட்சிகளின் உறுப்புக்கட்சிகளான மறுமலர்ச்சி திராவிடமுன்னேற்றக்கழகம் பாட்டாளிமக்கள் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு தெரிவித்திருப்பது அவர்களது சொந்தக் கருத்துக்களாகும்

இதேவேளை மறுமலர்ச்சி திராவிடமுன்னேற்றக்கழகப் பொதுச்செயலாளர் வை. கோபாலசாமிஇலங்கைப்பிரச்சினையில் தேசியஜனநாயக கூட்டணிஅரசின் நிலையைஒத்துக்கொண்டிருக்கிறார் என்பதையும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்

## குண்டு துளைக்காத கவச அங்கிகள் தயாரிக்க நிறுவனம் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினருக்கு குண்டு துளைக்காத கவச அங்கிகளை வழங்குவது தொடர்பாக, இராணுவஉபகரணங்களைத் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று சட்டபூர்வ நடவடிக்கையில் இறங்கி உள்ளதாக பாதுகாப்புச்செயலர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மேற்படி குண்டுதுளைக்காத கவசங்கள் தரக்குறைவாக இருந்ததால் அவற்றுக்கான விலையை வழங்குவதில் இலங்கை அரசு தயக்கம் காட்டிவருவதாக அவர் மேலும் தெரிவித்தார்

குண்டுதுளைக்காத கவசம் யாழ்ப்பாணத்தில் கடமை புரியும் படையினரிடம் போதியளவு போய்ச்சேராததால் அங்கு கடமைபுரியும் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் பலத்த சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் தெரிய வருகிறது. (க-வ)

## போதிய லொறிகள் இன்றி பொருட்கள் இறக்க முடியாத நிலை

(புலோலி)

யாழ்குடாநாட்டிற்குஉணவுப் பொருட்களை ஏற்றி வந்த கப்பல்கள் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நாளிலிருந்து பருத்தித் துறைதுறைமுகம் வந்து பெருட்கள் இறக்கப்படாத நிலையில் காங்கேசன் துறைமுகத்தில் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கபடுகின்றது

கப்பலில் உள்ள பொருட்களை இறக்கி ஏற்றுவதற்கு லொறிகள் இல்லாமையால் இக்கப்பல்களை காங்கேசன் துறை துறைமுகத்திலிருந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு அனுப்பமுடியவில்லை என்று துறைமுக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இக்கப்பல்களில்யாழ். குடாநாட்டிற்குத் தேவையான அரிசி, சீனி, சவர்க்காரம், பிஸ்கட் வகைகள் எடுத்துவரப்பட்டுள்ளன இப்பொருட்கள் இன்று அல்லது நாளை இறக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது(2-14)

# யாழ்மக்களுக்குஉணவு அனுப்பிவைக்க ஏற்பாடு

(கொழும்பு)

யாழ்ப்பாண மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைப்பதற்கு சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர்நாயகம் தெரிவித்துள்ளார்.

எனவே யாழ்ப்பாணத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு எதுவும் ஏற்படுவதற்கு நியாயம் இல்லை என்றும் பொது மக்கள் தேவையற்ற பீதிக்கோ அல்லது சமூக விரோத செயல்களுக்கோ இடமளிக்கவேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ.க]

## வடபகுதிக்கான கப்பல் சேவை அடுத்த வாரமளவில் ஆரம்பிப்பு

### டக்ளஸ் எம்.பி-உறுதிமொழி

[கொழும்பு]

திருமலையிலிருந்து வடபகுதிக்கான கப்பல் சேவை அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படும் என டக்ளஸ் எம்.பி.நேற்று உறுதியளித்துள்ளார்.

வடபகுதிக்கான கப்பல் சேவையினை எதிர்பார்த்திருக்கும்தமிழ்மக்கள்ஈ.பி.டி.பியினரை அணுகியபோது மேற்படி உறுதிமொழியை டக்ளஸ்தேவானந்தா வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களுக்கு மேலாக 5000க்கும் அதிகமான மக்கள் திருமலைச்செயலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கப்பலுக்காகக் காத்திருக்கின்றார்கள்.

இதேவேளை வடபகுதியிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்கும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கப்பலின் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகத் தெரியவருகின்றது. [04]

★ மட்டக்களப்பில்

## இராணுவம்-புலிகள்மோதல் இருவர்பலியென அறிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் ரோந்து சென்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எதிர்பாராத மோதல் ஏற்பட்டதாக படைத்தரப்பைமேற்கோள்காட்டிவிசேட தகவல் தொடர்பு ஊடகம் தெரிவித்தது.

இம்மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் கொல்லப்பட்டதாக தகவல் தொடர்பு ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (க-வ)

## விடுதலைப் புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

(வவுனியா)

ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின்போது தமது தரப்பில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

★ சாண்டோ / இளவள்ளல்
முத்துலிங்கம் அமிர்தலிங்கம்
மட்டக்களப்பு

★ விக்கிரம்/கண்ணன்
புவனேந்திரன் சதீஸ்பாபு
புதுக்குடியிருப்பு

★ சுடர்மதி/சந்திரன்
சிவப்பிரகாசம் இராமநாதன்
யாழ்ப்பாணம்

★ வேங்கை
தனபாலசிங்கம் அமரநேசன்
முல்லைத்தீவு

★ உயிரவன்
ஞானசுந்தரம் மதியழகன்
யாழ்ப்பாணம்

★ சதீஸ்
மகாலிங்கம் மகேஸ்வரன்
இயக்கச்சி

★ கோபிகா
வைரமுத்து கலைச்செல்வி
மட்டக்களப்பு [வ-7]

## இடம்பெயர்ந்த மக்களின் குறைகளைக் கேட்டறிந்தனர்

சாவகச்சேரிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி சரஸ்வதி மகாவித்தியாலயம், நெல்லியடி மாதாகோவில். அந்தோனியார் கோவில் ஆகியஇடங்களில் தஞ்சமடைந்திருக்கும் மக்களை ஈ.பி.டி.பி.யின் தென்மராட் அமைப்பாளர் சாள்ஸ் வடமராட்சி அமைப்பாளர். பிரதேச செயலர் ஆகியோர் சென்று பார்வையிட்டதுடன் மக்களின் குறைபாடுகளையும் கேட்டறிந்தனர் (ந)

## தவறாது கலந்து கொள்ளவும்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தின் தற்போதைய நிலை குறித்து கலந்துரையாடல் ஒன்று நாளை புதன் கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் காலை 10-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல பிரதேச செயலர்களை உதவி அரசாங்க அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் க, சண்முகநாதன் கேட்டுக் கொண்டுள்ளார் [வ]

## குட்டியப்புலத்தில் 'ஷெல்' வீழ்ந்து குடும்பஸ்தர் உடல் சிதறிப் பலி

[ஆவரங்கால்]

வசாவிளான் குட்டியப்புலம் பகுதியில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் ஆறு பிள்ளைகளின் தந்தையான பொன்னன் செல்லக்கண்டு [வயது 55] உடல் சிதறிப்பலியானார். அவரது மகன் செ. ரவீந்திரன் [வயது 24] காயங்களுக்குள்ளானார்.

நேற்று முன்தினம் இரவு சுமார் 10 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றி காயமடைந்த செ. ரவீந்திரன் தகவல் தருகையில்,

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் எமது பகுதியில் ஷெல் வந்து வீழ்ந்து வெடித்ததை அடுத்து நாங்கள் பாதுகாப்பாக வேறிடத்திற்குச் சென்றோம் பின் வீட்டில் உள்ள பொருட்களை எடுக்க திரும்பி வந்த போதே ஷெல்லில் இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

காயம் அடைந்திருந்த என்னை உறவினர்கள் அச்சுவேலியில் உள்ள அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்தனர் என்று கூறினார்.

ஷெல்வீச்சால்பலியானவரின் மரணச்சடங்குகள் நேற்று அவசர அவசரமாக நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது. (வ-57)

## யாழ். பிரதேச செயலர் பிரிவு ஊரடங்கு தளர்வையடுத்து மக்கள் பணிகள் வழமை போல்

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் மூன்று மணி நேர ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதை அடுத்து மக்களை தம் அன்றாடக் கருமங்களில் சுறுசுறுப்பாக மேற்கொண்ட வண்ணம் இருந்தனர்,

யாழ், நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் ஏற்றாமல் இருந்த பொருட்களை வர்த்தகர்கள், லொறிகளிலும் உழவு இயந்திரங்களிலும் ஏற்றிக் கொண்டு சென்ற வண்ணம் இருந்தனர்.

நகரில் உள்ள சகல வங்கிகளிலும் போதியளவு ஊழியர்கள கடமைக்குச் சமுகமளிக்காமல் இருந்த போதும் வங்கி அலுவல்கள் சுறுசுறுப்பாக நடைபெற்றது.

கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மக்கள் முண்டியடித்து தமது நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொண்டனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தம் சொந்த இருப்பிடங்களுக்குச் சென்று மீதியாக உள்ள வீட்டுச்சாமான்களை சைக்கிள்களிலும், சிறிய உழவு இயந்திரங்களிலும், கால் நடையாகவும் எடுத்துச் சென்ற வண்ணம் இருந்தனர்.

---

**பயங்கரவாத...**

காகவே இவரை ஆஜராகுமாறு தொல்லை தவிர்ப்புக் குழு உத்தரவிட்டுள்ளது.

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தொடர்பாக சட்டமா அதிபரின் பிரதிநிதி மல்லியா கொட வெளியிட்ட அறிக்கையில் 1998 ஆம் ஆண்டு 372 தமிழர் கைது செய்யப்பட்டதில் 352 பேர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர் 17பேர் மட்டுமே தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

1999 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட 300 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய காலதாமதமாகியுள்ளது.

இவை தொடர்பாகவே புலனாய்வுப் பணிப்பாளரை தொல்லை தவிர்ப்புக்குழு ஆஜராகப் பணித்துள்ளது. (வ-ச)

---

**சன்டே லீடர்...**

லேயே மேற்படி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகைத் தணிக்கைச் சட்டங்களிற்கு அமைவாக நடக்குமாறு இப் பத்திரிகைக்கு பல தடவைகள் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் ஆனால் இப் பத்திரிகை அந்த எச்சரிக்கைகளை புறக்கணித்ததாகவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஆறு மாதங்களுக்கு இத் தடையுத்தரவு செல்லுபடியாகும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் செய்தித் தணிக்கை அமுல்படுத்தும் விடயம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் விசேட குழு நியமிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உயர் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

---

**பொதுக்....**

அதிகாரத்தைப் பயன் படுத்தி மேற்படி தடையுத்தரவை ஜனாதிபதி விடுத்துள்ளார்:

இத் தடையுத்தரவு நேற்று காலாவதியாக இருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது:

---

**லொறி..'**

களஞ்சியத்தில் அரிசியும் சீனியும், காங்கேசன் துறையில் உள்ள உணவுக்களஞ்சியத்தில் போதியளவு மாவும் கையிருப்பில் உள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் கூறிக் கொள்ளும் அதே வேளை அவற்றை மக்களுக்குவிநியோகம் செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை இப் பொருட்களை விநியோகம் செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் இப் பொருட்களை களஞ்சியங்களிலிருந்து ஏற்றுவதற்கு போதியளவு லொறிகள் தற்போது அவர்கள் வசம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உணவுப்பொருட்களை ஏற்றிப்பறிப்பதில் போதியளவு லொறிகள் இல்லாமையால் போதியளவு உணவு இருந்தும் பட்டினி நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்று. மக்கள் பேசிக் கொள்கிறார்கள். (வ)

---

**தமிழகம்..;**

மணல் திட்டில் சிக்கியுள்ளனர் எனவும் இவர்கள் நேற்று மாலைக்குள் மீட்கப்படுவர் என்றும், நெடுந்தீவிலிருந்து 4 தமிழ் அகதிகள் தமிழகம் சென்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை நேற்று முன்தினம் 34 பெண்கள், 14 குழந்தைகள் உட்பட 72 தமிழ் அகதிகள் இந்தியா சென்றுள்ளனர் என்றும் கடந்த மூன்று நாட்களில் மொத்தம் 85ற்கும் அதிகமானோர் தமிழகம் சென்றுள்ளனர் என்றும் இந்திய வானொலி அறிவித்துள்ளது. (வ-4)

---

ஊரடங்கு வேளையிலும்

# யாழ். ஆஸ்பத்திரி ஊழியருக்கு விசேட போக்குவரத்து சேவை

(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டிருக்கும் தற்போதைய சூழ் நிலையிலும் கூட யாழ். போதனாவைத்தியசாலையின் முக்கிய ஊழியர்களுக்கு போக்குவரத்துச் சேவை வழங்கப்பட்டுவருகிறது.

24 ஆம் இலக்கவிடுதி அவசர சிகிச்சைப் பிரிவு, அதி தீவிர சிகிச்சைப்பிரிவு சத்திர சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்றே பிரிவுபோன்ற பகுதிகளில் கடமையாற்றுவோருக்கே இந்த போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-12)

---

**இந்தியா...**

சன் தெரிவித்துள்ளார்.

எனினும்யாழ்ப்பாணத்திற்காக இரு தரப்பும் முழு மூச்சுடன் போரிட்டுக் கொண்டிருக்கும் நிலையில் சமாதானத்திற்கான வாய்ப்பே இல்லையென பொதுவான அபிப்பிராயம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-க)

---

**தனங்களப்பில்'..**

தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் நிலைகள் மீதே இத் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் தகவல் தொடர்பு ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (க)

---

**நோர்வே.:.**

துப்பேசினர்.

இதனைத் தொடர்ந்து எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை அவரது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்காவை பிற்பகல் 4.00 மணியளவில் அலரிமாளிகையில் சந்தித்து உரையாடினார்.

நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் றேமன்ட் ஜொகான்சன் ஜனாதிபதி சந்திரிகாவுடன் யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகவும் தற்போது நடைபெற்று வரும் கடுமையான போரை முடிவுக்குக் கொண்டு வந்து யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாகவும் ஆராய்ந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிகாவுடனான சந்திப்பின்போது இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் லயனல் பெர்னாண்டோ இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு நோர்வே அரசினால் நியமிக்கப்பட்ட எரிக் சோல்கைமும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஜனாதிபதியின் செயலர் கே. பாலபட்ட பெண்டி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர், அமைச்சர்களின் ஆலோசகர் எரிக்சயன், இலங்கையில் உள்ள நோர்வே தூதுக்குழுவின் ஜோன் விஸ்பேக் கோஸ்த் கொன்சன்ற் ஆகியோரும் இத் தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் இன்று கண்டிக்கும் விஜயம் செய்த பின் நாளை நோர்வே திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

---

**யாழ், !**

ளார்.

சுமுகமான நிலையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றதாகவும் பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்டமுடிவுகள் எதுவும் வெளியிடப்படவில்லை எனவும் புதுடில்லிச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன. [க]

---

## சுழற்சி முறையில் மின் விநியோகம்

யாழ். பிராந்தியத்தை நான்கு வலயங்களாகப் பிரித்து சுன்னாகத்திலிருந்து சுழற்சிமுறையில் மின்சாரம் வழங்குவதற்கு யாழ். மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் காலை 5மணி தொடக்கம் 6மணி வரை வடமராட்சிப் பகுதி 6மணி தொடக்கம் 7மணி வரை வட்டுக்கோட்டைப் பகுதி, பருத்தித்துறை வீதி, 7மணிதொடக்கம்8மணிவரை கே. கே, எஸ். வீதி, 8மணி தொடக்கம் 9மணி வரை. யாழ் நகரம் (திருநெல்வேலிப் பகுதி உட்பட) மாலையில் 4.30 தொடக்கம் 5.30 மணி வரை யாழ் நகரம், 5.30 தொடக்கம் 6,30மணிவரை கே. கே, எஸ், வீதி 6.30 தொடக்கம் 7 30மணிவரை வடமராட்சி, 7.30தொடக்கம் 8.30வரை பருத்தித்துறை வீதி என்ற ஒழுங்கில் மின்சாரம் வழங்கப்படும. [ந]

## வழமை போல் பஸ் சேவை நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

கடந்த சில தினங்களாக செயலிழந்திருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவைகள் யாவும் மீண்டும் இன்று ஆரம்பிக்கப்படுமென பொதுமுகாமையாளர் எஸ். சொக்கலிங்கம் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

ஊரடங்கு தளர்த்தப்பட்டிருக்கும் போது யாழ். நகரப் பகுதிகளிலிருந்தும் ஏனைய நேரங்களில்கொக்குவில்சந்தி, கல்வியங் காட்டுச் சந்தி, ஆகிய இடங்களிலிருந்தும் பஸ் சேவை நடாத்தப்படும்.

குறிப்பாக கொக்குவில் சந்திக்கு வரும் பஸ்கள் அனைத்தும் கல்வியங் காட்டுச் சந்திக்குச் சென்று மீண்டும் கொக்குவிலை வந்தடையும். இதன் மூலம் வடமராட்சித் தொடர்பு இலகுபடுத்தப்படும் என்றும்பொதுமுகாமையாளர்மேலும் தெரிவித்தார். (ந)

## சரசாலையில் மோதல்

சாவகச்சேரியின் வடக்கேயுள்ள சரசாலைப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் பெருமளவினர் கொல்லப்பட்டதாக கொழும்பு பாதுகாப்பு தலையகம் தெரிவித்ததாக பி. பி. சி. நேற்று தெரிவித்தது.

பி.பி. சி. தெரிவிக்கையில் 50 போராளிகளின் சடலங்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்குமாறு இலங்கை இராணுவம் தம்மைக் கேட்டுக் கொண்டதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது இதுவிடயம் குறித்து புலிகள் தரப்பிலிருந்து எதுவித கருத்தும் வெளியிடப்படவில்லை என்றும் பி. பி, சி, தெரிவித்துள்ளது. [க]

---

# மரண அறிவித்தல்

## திருமதி பிலோமினா சந்தியாகோ

இல: 14, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி பிலோமினா சந்தியாகோ நேற்று (22-05-2000) காலமானார். அன்னார் காலஞ்சென்ற பிலிப்பிகோரி சந்தியாகோவின் (A. C. S) அன்பு மனைவியும், திரு. திருமதி மனுவேலின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் [ரயில்வே), முத்தையா (வனஇலாகா) ஆகியோரின் அன்புச்சகோதரியும், பிறின்சி சத்தியதாஸ், ரைடஸ் (கொழும்பு), பீற்றர்போல் (U.S A), அதத்தா அருட்பிரகாசம் (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஐஸ்ரர் (யாழ். மாநகரசபை), மாலினி (கனடா), லோஜினி (ஜேர்மன்), ஆகியோரின் அன்புத் தாயாரும், யோசப் சத்தியதாஸ் (இளைப்பாறிய விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) Dr. சந்திரா போல் (U. S. A.), இந்திரா, காலஞ்சென்ற அருட்பிரகாசம் (புனித சம்பத்திரிசியார் கல்லூரி), சியாமாஐஸ்ரர் (ஆசிரியை, ஸ்ரான்லிக் கல்லூரி) தேவதாஸ் [கனடா], கனகராஜா [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமியாரும் அலன் நவராஜன் [ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம்[, யேசவ் பத்தியதாஸ்[சொவ்வெயார் டெவலப் என்ஜினியர்], சிந்துஜா [கனடா), தனுஜா (கனடா), கீர்த்திகா [சுண்டுக்குளி மகளிர் கல்லூரி] அஜந் [சென். ஜோன்ஸ் கல்லூரி) நந்திகா [சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), நிருத்திகா [சுண்டுக்குளி மகளிர் கல்லூரி] நிதுஷன் [சென். ஜோன்ஸ் கல்லூரி), ஜென்சன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று. இல 241, பருத்தித்துறை வீதி, நல்லூர் [முத்திரைச் சந்திக்கருகாமையில்] உள்ள இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஐஸ்ரர் சந்தியாகோ
[மகன்]

இல. 241, பருத்தித்துறை வீதி,
நல்லூர். [332]

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மேமாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.